**STARTING TIME 11.31 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 22/2019**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 25.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : எமிமால் Father's Name : வேலு

Address : சோமசுந்தரம் ஹரிஜன காலனி, சோமசுந்தரம் கிராமம், சோளிங்கர் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 37

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால, தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண்கள் என்னவென்றால், சோளிங்கர் சர்வே எண் 955/2–ல் 38 செண்டும், 957/3–ல் 46 செண்டும் ஆகும். தாவா சொத்து நஞ்சை நிலமா அல்லது புஞ்சை நிலமா என்றால், புஞ்சை நிலம் தான், அதில் நாங்கள் துவரை, கம்பு மற்றும் சோளம் பயிர் செய்து வந்தோம்.

2. தாவா சொத்துக்களின் செக்குபந்தி என்னவென்றால், மேற்கில் சுடுகாடும், கிழக்கில் முள்வேலி உள்ளது, வடக்கில் வேறு ஒருவரின் நிலமும், தெற்கில் பள்ளிக்கூட விளையாட்டு மைதானமும் உள்ளது. தாவா சொத்து ஆதியில் அம்மாகண்ணம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றால், சரிதான். அவருக்கு நாகவள்ளி என்பவர் தான் ஒரே வாரிசு என்றால், சரிதான். நாகவள்ளி என்பவர் காலமாகிவிட்டார் என்றால், சரிதான், அவர் இறந்ததை பற்றி கேள்விபட்டேன்.

நாகவள்ளி என்பவருக்கு எஸ்தரம்மாள் என்பவர் தான் ஒரே வாரிசு என்றால், சரிதான். எஸ்தரம்மாள் எப்போது காலமானார் என்று தெரியுமா என்றால், தெரியாது.

3. ஆதியில் தாவா சொத்தை அம்மாகண்ணம்மாள் தான் அனுபவித்து வந்து வரியும் செலுத்தி வந்தார் என்றால், சரிதான். எஸ்தரம்மாள் காலமாவதற்கு முன்பே அவரது அம்மா நாகவள்ளி காலமாகிவிட்டார் என்றால், சரிதான். அம்மாகண்ணம்மாள் காலமான சமயத்தில் தாவா சொத்தை அவர் தான் அனுபவித்து வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும். அதற்கு ஆதாரமாக வாதி தரப்பில் வரி ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால், அது பற்றி தெரியாது.

4. ஒரு நிலத்திற்கு யார் வரி செலுத்த முடியும் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும். வா.சா.ஆ.1 வரி ரசீனாது அம்மாகண்ணம்மாள் பெயரில் உள்ளது என்றால், சரிதான். அதேபோல் வா.சா.ஆ.9 வரி ரசீது வாதி கண்ணன் பெயரில் உள்ளது என்றால், சரிதான்.

5. அம்மாகண்ணம்மாள், முருகன் என்பவருக்கு எந்த வகையான அடமான பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என தெரியுமா என்றால், சுவாதீனத்துடன் கூடிய அடமான கடன் பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார். தாவா சொத்தில் நாங்கள் என்ன பயிர் செய்து வந்தோம் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால், அது பற்றி தெரியவில்லை.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 11.44 A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.02.25 12:48:26 +0530